# இருளும் ஒளியும்

இருள்சூழ்ந்த நாளில் ஒளியிருக்கும்
அந்த ஒளிதான், தமிழ்!
தமிழ் ஒரு ஒளியாகும்!

இதற்கு சமர்ப்பணமாக ஒரு கவிதையொன்று.

## பாருங்களோ நல்ல நாடு

அவர்களை சிறையில் சந்தித்தேன்,
என்ன குற்றம் செய்தீர்கள்?
என்று கேட்டேன்,
ஒவ்வொருவராக சொல்ல தொடங்கினார்

எங்கள் வீட்டில் திருடிக் கொண்டு
ஒருவன் ஓடினான், 'திருடன், திருடன்'
என்று கத்தினேன்.
அமைதிக்கு பங்கமாக என்னை கைது செய்து
விட்டார்கள்.

என் வருமானத்தை கேட்டார்கள்
நான் 'வேலையில்லா பட்டதாரி என்றேன்'
வருமானத்தை மறைத்ததாக கைது

செய்து விட்டார்கள்

நான் 'கரி மூட்டை தூக்கும் கூலி'
கூலியாக கிடைத்த ரூபாய்
நோட்டில் கரி பட்டு கருப்பாக்கி விட்டது
கருப்பு பணத்தை வைத்ததாக
பிடித்து கொண்டு வந்து விட்டார்கள்.

நான் என் வயலில் வரப்பு
எடுத்து கொண்டு இருந்தேன்,
பிரிவினை வாதி என்று கைது செய்து
விட்டார்கள்.

அதிகாரி லஞ்சம் வாங்கினான்.
தடுத்தேன்,
அரசு பணியாளரை அவருடைய வேலை
செய்ய விடாமல் தடுத்ததாக, தண்டித்து-
-விட்டார்கள்.

'அலிபாபாவும் நாற்பது நண்பர்களும்'
என்ற வரைச் ~~சுவரொட்டியை~~ ஒட்டிக்
கொண்டு இருந்தேன், குற்றமற்ற ~~உருவினை~~
அவதூர் செய்ததாக,
கைது செய்து விட்டார்கள்.

நான் பத்திரிக்கை பணியாளரின்
தலையங்கத்தில் உண்மையை
எழுதினேன்,
நாட்டின் ஸ்திரதன்மைக்கு
பங்கம் விளைவித்ததாக,
பிடித்து வந்து விட்டார்கள்

'உரிமை கோட்டை அழிப்போம்' என்று
பேசினேன்,
அரசாங்க சொத்தை அழிக்கத்
தூண்டியதாக, பிடித்து வந்து விட்டார்கள்

சுதந்திர தின விழாவில் 'ஜனகண மன'
பாடிக் கொண்டிருந்தார்கள்,
எனக்கு பசியால் எழுந்து நிற்க
முடியவில்லை,
நான் படுத்து கொண்டு இருந்தேன்
தேசிய கீதத்தை அவமானித்ததாக
கைது செய்து விட்டார்கள்.

'குற்றத்தின் முன் ஆயுதம் ஏந்து
என்றான் கண்ணன், என்று ~~யசா~~
பண்டையகாலத்தில் கலைவலயத்தில் யாரோ
சொன்னார் என்பெயர் கண்ணன்' என்று
யாரோ என்னை பிடித்து கொண்டு
வந்தார்கள்.

நான் வெளியே வந்தேன்
சட்டங்களை ஒழுங்கு படுத்தினேன்
நாடு அமைதியா இருந்தது.

இந்த சட்டங்களை ஒழுங்கு படுத்தினே
அப்பொழுதுதான், ~~இன்~~
இந்த நாட்டு இருளில் இருந்து
ஒளியில் வந்தார்கள்.

தமிழ் நாடு ஒளி என்னும் நாடு.

ஸ்ரீ

# இருளும் ஒளியும்

## ஸ்ரீஅணையபடும்

தெற்கே தெற்கே
~~ஜோதிகள்~~ மூட்டும் தீயே
பாற்றாதே! பழங் காலத்து
பாம்பே! எங்கள்
காலை சுற்றாதே!

மண்பானைக் கூடும் மண்பானைக் கூடும்
~~மல்லை~~
மல்லுக்கு நிற்பதுவோ! - இங்கே
கண்ணீர் துளிகள் கண்ணீர் துளிகள்
~~கல்கள்~~ கலப்பதுவோ!

தாழ்த்தப் பட்டவர்,
ஒதுக்கப் பட்டவர், சண்டை
பிடிகையிலே- அங்கே
தாழ்த்தி படுவது, வேதனைப் படுவது

வேரோரு இனம(ல்) வோ

முன்னுறாண்டு முன்னைக்கு
இருந்தால் முறட்டு விஞ்ஞானம் - அதுவே
முன்னுறாண்டு பின்னே சென்றால்
முழுக்க அஞ்ஞானம்.

வேரோரு இனமில் அடிப்பது
ஆரோ ஏழோந்தான் - அதுவே
ஸ்வந்த மன்னவரோடு அடிப்பது
மனவிலும் அதிக்கம் தான்.

ஏரோரு நாளில் கல்வி கல்வி பேரும்
பொது - கையில்
ஆயுதம் ஏந்த ஏந்தச்
சென்ன ஜத்திப் பிரச்சனைத்
-தான்

ஜத்தி சண்டை பிரச்சனையால்
ரத்தம் சிந்துவரோ - அந்த
உயிர் இழப்பது வேத் மன்னவரோடு

ஒளியிருக்கும் நாட்டில்
ஜாதிப் பிரச்சினையால்
ரத்தம் சிந்தி இருளாகிவிடும்
நம் நாடு!

ஒளியிருக்கும் தீபாவளியில்
இருளில் ஒளி சேர் கொண்டாடும்
நாடு - தமிழ் நாடு.

தமிழ் மக்களின் மனதில்
ஒளிதான் எப்பொழுதும்
இருக்கும். - அந்த ஒளி திகழும்
எப்பொழுதும்.

திட்க்கே திட்க்கே ஒளியே
ஒளிதான் உலகின் அழகு
அழகே அழகே தமிழ் மக்களின்
மனதே!

தமிழுண்டு தமிழ் மக்களுண்டு
தமிழ் மக்களில் மனத்தில்
ஒளியும் உண்டு.
இருள் சூழ்ந்த நாளில் தீபம்
உயர்த்திடும் ஒளியே - இவ்வுலகின்
மக்களில் உண்டு.

இருளான முகம் இருந்தாலும்
ஒளியான முக மனம் இருக்க
வேண்டும் - அவ்வாறு ஒளியான
மனத்தை தந்த இறைவனுக்கு
நன்றி கூறுங்கள்.!

இரவில் இருளான வானத்தில்
ஒளியாக இருக்கும்
நிலாவும் நட்சித்திரங்களும் தான்
இவ் வுலகில் இருக்கும் மக்கள்
அதில் நிலா தான் கடவுள்
அந்த நச்சத்திரங்கள் தான்
இவ்வுலகிலுள்ள மக்கள்!

இருளே இருளே ஓய்ந்து விடு
ஒளியே ஒளியே வந்து விடு
இவ்வுலகத்தில் மக்களில்
ஒளிதான் கடவுள்.

ஒரு இருளில் கடவுள்
தரும் ஒளிதான் குழந்தை
அக் குழந்தையை ஒளியாகவும்
இருளாகவும் வருத்துவது அவருடைய
பெற்றோர்கள் தான்!

அதனால் பெற்றோர்கள் மதித்து
கடவுளை வழிபடுங்கள். ஒளியாக
இருக்குபவர்களை உங்களுடைய
வழியாக்கி கொள்ளுங்கள்.

இந்த உலகின் ஒளியாக இருங்கள்
இருளாக இருக்காதீர்கள்...!

x — x — x — x